2009 பிப்ரவரி 26] [பேராசிரியர் க. அன்பழகன்]

புகுந்துவிட்டார்கள் என்பதைத்தான் நான் அப்படிச் சொன்னேன். அப்படிச் சொன்னதைச் சிலபேர் புரிந்துகொள்ளவில்லையென்றால், இப்போது நான் புரியவைத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி.

## (ஔ) இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டம் மற்றும் கண்டன ஊர்வலம் நடத்த அனுமதி கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில், அமைதி வழியில், அறவழியில், ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பிலேகூட பல அரசியல் கட்சிகள், தமிழ் அமைப்புகளால் அனுமதி கேட்கப்பட்டிருக்கின்றது. க்டந்த 23 ஆம் தேதி . . . (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகள் குறித்து, நிறைய நாட்கள் பேசி, பல நாட்கள் விவாதித்து, பதில்களெல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்று ஒரு மணிக்கெல்லாம் 'கில்லடின்' எடுக்க வேண்டும். சட்டமுன்வடிவு ஒன்றும் இந்த அவையிலே நிறைவேற்றப்பட இருக்கிறது. உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் பரிசீலிக்கிறோம். இப்போது நேரம் இல்லை. நேரம் இருந்தால் நீங்கள் பேசலாம். இது திரு. ஜி.கே. மணி அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அவர்கள் மணிக் கணக்கிலே பேசியிருக்கிறார்கள். இப்போது மணி 12.42 ஆகிறது. இதற்கு மேலே அருந்ததியினருக்கான சட்டமுன்வடிவு எடுக்க வேண்டும். அதற்குப் பின்பு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 'கில்லடின்'–இலே ஒப்புதல் பெறவேண்டும். எனவே, தயவுசெய்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23 ஆம் தேதி, 5 நாட்கள் அவகாசமென்று அனுமதி மறுக்கப்பட்டது. 5 நாட்கள் கழித்துக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நாளைக்கு ஆர்ப்பாட்டம் இருக்கிறது. அறவழியில், ஜனநாயக ரீதியில் நடைபெற இருக்கின்ற ஆர்ப்பாட்டம். அதற்கு அரசு அனுமதிக்க வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைக்கிறேன்.

### (அஅ) கடலோர மண்டல மேலாண்மை ஆணைய அறிவிப்பாணையை அமல்படுத்தாமல் இருக்கக் கோருதல்

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 25 கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருந்தோம். ஆனால், இன்றைக்கு எடுக்க முடியவில்லை. அதிலே மிக முக்கியமானது, மத்திய அரசு கொண்டு வந்துள்ள கடலோர மண்டல மேலாண்மை ஆணைய அறிவிப்பாணை. அதனை மத்திய அரசு அறிவித்திருக்கிறது. பல மாநில அரசுகள் அதை அமல்படுத்த முடியாது என்று சட்டமன்றத்திலே தீர்மானம் போட்டிருக்கின்றன. தமிழக அரசும் அமல்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறோம். இதுகுறித்து அந்தத் துறை என்ன சொல்கிறது என்ற தகவலை எங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழு தலைவரின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்றாவது முதல் நூற்று நாற்பத்து நான்காவது வரையிலான நான்கு அறிக்கைகளைக் குழுத் தலைவர் அவர்களின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.